# எந்த படையெடுப்பையும் எதிர் கொள்ளத் தயார்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 05 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 12 இதழ் 192
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28 — 8 — 1993


## தமிழ்ச்செல்வன் பேட்டி

(கொழும்பு)
"தேவைக்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு எந்தப்படையெடுப்புக்களையும் எதிர்கொள்ளக் கூடியதயார் நிலையிலேயே நாம் இருக்கிறோம்" இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியற்துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் பி. பி. ஸி.யின் கொழும்பு நிருபர் ஜெயசீல நேசனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(2-ம் பக்கம்பார்க்க)

## கிளாலிகடற்பாதை போக்குவரத்திற்கு தடை

(கொழும்பு)
கிளாலி கடற்பாதை பொது மக்களின் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் நேற்று தெரிவித்தார். இப்பாதையூடாக செல்லும் படகுகள் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகுமெனவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.
இதேவேளை கிளாலி கடற்பகுதியில் விடுதலைப்புலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

### மாதகல், இயக்கச்சி பகுதிகளில்

# இராணுவம் முன்னேற முயற்சி

# புலிகள் தாக்கி முறியடிப்பு!

## படைகளுக்கு சேதம்; ஆயுதங்கள் இழப்பு

(யாழ்ப்பாணம்)
மாதகல் - இயக்கச்சிப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை குண்டுவீச்சு விமானங்களின் உதவியுடன் மேற்கொண்ட பாரிய முன்னேற்ற முயற்சிகள் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது. இத்தாக்குதலின்போது இராணுவத்திற்கு பலத்த உயிரிழப்பு. ஆயுத, தளபாட இழப்புகளும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அகோர விமானகுண்டு வீச்சு

யாழ். குடாநாட்டில் நேற்று ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு வலிகாமம் பகுதியிலும் நேற்று சிறிலங்கா விமானப் படையினர் அகோர விமானத் தாக்குதல்களை மேற்கொண்டனர். பல மணி நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன.
நேற்று முன்தினம் அதிகாலை கிளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு பதிலடியாக இந்த விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன

## ஐந்து பேர் உடல்சிதறிப் பலி

மாதகல் பகுதியிலிருந்து இராணுவம் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சிகளின் போது விமானக்குண்டு வீச்சினாலும் ஷெல் தாக்குதல்களினாலும் ஐந்துபேர் கொல்லப்பட்டனர். பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. நேற்றுக் காலை 7-30 மணியளவில் மாதகலிலிருந்து குடிமனைகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது காலை 8-45 மணியளவில் இரு பொம்மர் விமானங்களும், இரு புக்காரா விமானங்களும், டாங்கிகளும், கடலிலிருந்து பீரங்கிப் படகுகளும் குடிமனைகளை நோக்கி பலத்த தாக்குதல்களை மேற்கொண்டன.

## டாங்கிகள், கவசவண்டி சேதம்

மாதகல் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பண்டத்தரிப்பு, சில்லாலை, பொன்னாலை பகுதிகளை நோக்கி இருமுனைகளில் நேற்று மேற்கொண்ட பாரிய முன்னேற்ற முயற்சிகள் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டன. நேற்றுக்காலை 8.45 மணியளவில் அகோர விமானக்குண்டு வீச்சுக்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவாறு சிறிலங்கா இராணுவத்தினர் டாங்கிகளின் உதவியுடன் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை முன்னேறினர். இம் முன்னேற்ற முயற்சியை எதிர்த்து நடத்திய ஆர். பி. ஜி. தாக்குதல்களின்போது இரு டாங்கிகளும் ஒரு பவல் கவச வாகனமும் பலத்த சேதமடைந்தன. இராணுவத்திற்கு பலத்த உயிரிழப்புகளும் ஆயுத தளபாட இழப்புகளும் ஏற்பட்டன.

## மூன்று புலிகள் வீரச்சாவு

மாதகலில் விடுதலைப்புலிகள் முன்னேறிய இராணுவத்தை எதிர்த்து பலத்த தாக்குதல் மேற்கொண்டதை அடுத்து நேற்று பி பகல் அளவில் முன்னர் நிலை கொண்டிருந்த இடங்களுக்கு படையினரை விரட்டியடித்தனர். இச்சம்பவத்தில் இராணுவத்தை எதிர்த்து தாக்குதலை மேற்கொண்டவேளை மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். லெப். அல்பேட் (வேலாயுதம், மிதரங்கன் சிலாலை), 2-ம் லெப் உத்தமன் (இரத்தினசிங்கம், அறிவழகன், ஏழாலை), வீரவேங்கை பொழிலன் (நாகராசா கணேஸ்வரன் வன்னேரிக்குளம்) ஆகியோரே வீரச்சாவைத்தழுவிக் கொண்டனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இயக்கச்சியில் விரட்டியடிப்பு

இயக்கச்சிப் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 9 மணியளவில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டபடி முன்னேற்ற முயற்சியை மேற்கொண்ட இராணுவத்தினர்மீது பிற்பகல் 3-30 மணி வரை விடுதலைப்புலிகள் கடும் சமரை மேற்கொண்டு இராணுவத்தினரை விரட்டியடித்தனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சியில் ஒருவர் அதிர்ச்சியினால் மரணம்

(எழுதுமட்டுவாள்)
இயக்கச்சியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் அதிர்ச்சியடைந்த ஒருவர் மரணமானார். இதே இடத்தைச் சேர்ந்த வி. வேலாயுதம் வயது 46 என்பவரே மரணமானவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு 'ஷெல்'லால் நாலவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தொடர்ச்சியாக பளை, புலோப்பளை, இந்திராபுரம், புதுக்காட்டுச் சந்தி, இயக்கச்சி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது:
ஷெல் தாக்குதலின்போது

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - கடற்படை நேற்றும் கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)
கிளாலிக்கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளின் கடல் புலிகளுக்கு மிடையில் நேற்று மாலையும் கடும் மோதல்கள் நடைபெற்றன
கிளாலிக்கடலில் பலியான படையினரின் சடலங்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழநீதிமன்றம் சாவகச்சேரியில் திறப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்தின் 2-வது நீதிமன்றம் இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் திறந்து வைக்கப்படுமென்று தமிழீழ நீதித்துறைத் பொறுப்பாளர் திரு. பரா தெரிவித்துள்ளார்.
இவ்விழாவில் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

## பயிலுநர் ஆசிரியர்களாக 31 பட்டதாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட கீழ்வரும் 31 விண்ணப்பதாரிகளும் இன்று 28-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நியமனம் தொடர்பான எல்லா ஆவணங்களுடனும் யாழ் கல்வித் திணைக்களத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
திரு. சு சயந்தன், திரு. பீ. சந்திரகுமார், செல்வி க.

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி- பூநகரி படகுச்சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி- பூநகரி படகு சேவை இன்று 28ம் திகதி சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பிரிவு அறிவித்துள்ளது.

## விளம்பரம்

### வாங்குகிறோம்

சுத்தமான வேப்பம் விதை கிலோ ரூபா. 6/- நன்றாக காய்ந்த வேப்பம் பழக்கோது தப்பரவானது கிலோ. ரூபா. 2/-. — மில்க்வைற் (ஏ-3370)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்கு மிடம் எஸ். டி. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ-251)

### COMPUTER கல்வி

Basic Language, Week-day, Week end Classes, Lotus 1-2-3 -Join any Day Classes, Shorthand & Typing. புதிய பிரிவுகள் ஆரம்பம் 28-08-93 முதல் உறுதியான கல்வியைப் பெற School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (இ-426)

### வியாழன் யுத்தச் செவ்வாய் தியசேர்க்கை

8-9-93 முதல் 15 நாட்களுக்கு கன்னிராசியில் 8 பாகை சித்திரை நட்சத்திரத்தில் கூடுவதாலும், வக்கிரச் சனியின் பார்வையினாலும், வடக்கில் பாரியயுத்தமுண்டாகும். ஜாதகங்களின் கணிப்புகளுக்கு "சத்தியா" கட்டுடை, (இ-430)

### நீமியா விலை குறைப்பு

உழுது, எருவிட்டு உரம் வைக்கக் காத்திருக்கும் விவசாய பெருமக்களே வேப்பம் பிண்ணாக்கு கொண்டு தயாரான உச்சபலன் பயக்கும் அடிக்கட்டு உரம் நீமியா. பயிர் பாதுகாப்புச் சாதனம் கூட. விலை கிலோ ரூபா 17/- 20 கிலோ பொதி ரூபா 300/- அனைத்து கோப்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது.

— மில்க்வைற் (ஏ-3373)

### ஆண்டு 3 பரீட்சை

ஆண்டு 3 மாணவர்களுக்கு (புலமைப்பரிசு 1995) மாதிரிப் பரீட்சை (முதலாவது) 29-08-93 ஞாயிறு மு.ப.8-00, 11-00 நேரங்களில் நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாணவர் தர ரீதியாகப் பிரிக்கப்பட்டு வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. இணைய விரும்புவோர் தொடர்பு கொள்க: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கி-429)

## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெற்ற உள வளத்துணை அடிப்படைக் கற்கைநெறி (தொகுதி 7) ஆகிய கற்கை நெறிகளின் நிறைவுவிழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று 28-ம் திகதி பி.ப 3-00 மணிக்கு கலைப்பீடத்தில் இடம்பெறவுள்ளன.

புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இரா. சிவசந்திரனின் தலைமையில் கீழ் இடம்பெறவுள்ள மேற்படி நிறைவு விழாவிலே பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை பதில் துணைவேந்தர், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வழங்கவுள்ளார். வைத்திய நிபுணர், உளவளத்துறைத் தலைவர் கலாநிதி த. ஜே. சோமசுந்தரம், உளவளத்துறை விரிவுரையாளர் வண. பிதா. எஸ். டேமியன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

## "சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்தல்"

எமது திணைக்களமும் சித்தவைத்தியக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் மேற்படி கருத்தரங்கு ஆகஸ்ட் 29ம், 30ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற எம்மோடு தொடர்பு கொண்ட அனைவரையும் 29ம் திகதி காலை 8-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

சுந்தரம் டிவகலாலா
பிரா/உ. உ. ஆணையாளர்

உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்
26-8-93. (இ-3378)

## அறிவித்தல்

### பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச்சபை

இவ் வைத்தியசாலையின் நூற்றாண்டு விழாவை யொட்டி வெளியிடப்படவுள்ள நூற்றாண்டு விழா மலரில் வைத்தியசாலையின் வரலாறு இடம்பெற வேண்டுமென அபிவிருத்திச்சபை கருதுகின்றது. எனவே இதுபற்றி தகவல் தரக்கூடியவர்கள் உடனடியாக கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்,
பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை,
அபிவிருத்திசபை,
புலோலி. 25-08-1993.

நிர்வாகக்குழு

(கி-3379)

## அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

"மணியம் வர்த்தக நிலையம்"
(பலாலி வீதி, திருநெல்வேலி) ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:
29-8-1993 ஞாயிறு மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5-00 — 5-45 வயலின் இசை
செல்வி குமுதினி கனகரெட்ணம் — வயலின்
திரு. எஸ். மகேந்திரன் — மிருதங்கம்
திரு. எஸ். துரைராஜா — கெஞ்சிரா

5-45 — 6-45 இசைக்கச்சேரி
திரு. பொன். ஸ்ரீ வாமதேவன் — பாட்டு
திரு. வி. ஆர். இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு எம் சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. கே. கண்ணதாசன் — கடம்

6-45 — 7-15 மங்கள விளக்கேற்றல்
1. திரு. ப. பாலசுப்பிரமணியம்
உரிமையாளர்; மணியம் வர்த்தக நிலையம், திருநெல்வேலி.
2. திரு. சி. கணேசராசா
உரிமையாளர்; கணேசன் வர்த்தக நிலையம், (மாசிக்கடை) திருநெல்வேலி

தலைமையுரை திரு. சா. மதியாபரணம், ஜே. பி.
(முன்னாள் புங்குடுதீவு ஊராட்சி மன்றத்தலைவர்)

பிரதம விருந்தினர் உரை:
திரு. சி. சிவலிங்கராசா எம். ஏ.
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

7-15 — 8-45 சிறப்பு நிகழ்ச்சி:
தென்மராட்சி திலகநர்த்தனாலயம் வழங்கும்

### பரதநாட்டிய நிகழ்ச்சி

நட்டுவாங்கம்: நாட்டியக்கலைமணி, திருமதி யசோதா விவேகானந்தன், பாட்டு: திரு. பொன். ஸ்ரீ வாமதேவன், திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம், மிருதங்கம்: எஸ் துரைராசா, வயலின்: திருமதி தியாகேஸ்வரி சிவநாதன்

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேற்படி மன்றத்தினர்.

(சி-431)

## எந்த படையெடுப்பையும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தனது பேட்டியில் தெரிவித்துள்ளதாவது.

எமது மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். ஆனால் தற்காலிகமான சமாதானத்தையோ தீர்வையோ அவர்கள் விரும்பவில்லை.

எமது இனத்திற்கான நிரந்தரமான உறுதியான சமாதானத்தையும், இறைமையாகவும் உரிமையோடும் சுதந்திரமாகவும் வாழவே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் இலங்கை அரசு ஒரு தப்புக்கணக்கு போட்டுள்ளது. எமது மக்கள் மீது படுகொலைகளையும், குண்டு வீச்சுக்களையும் மற்றும் பல தடைகளையும் ஏற்படுத்தினால் விடுதலைப்புலிகள் மீதும் விடுதலைப் போராட்டத்தின் மீதும் விரக்தி ஏற்படுமென்று நினைக்கிறது.

ஆனால் உண்மையிலேயே எமது மக்களுக்கு இது இன்னும் வேகத்தையும், விடுதலையின் அவசியத்தையும் உணர்த்தி மேலும் எமது போராட்டத்தைத் தீவிரப் படுத்துவதையே எம்மால் காணக்கூடியதாக இருக்கிறது.

விடுதலைப்புலிகளின் இராணுவ இலக்குகள் என்று கூறிக் கொண்டு பொதுமக்கள் வாழும் பகுதிகளையே குறியாகக் கொண்டு ராணுவம் தாக்குதல்களை மேற்கொள்கின்றது.

எமது இராணுவ நோக்குடனான முகாம்கள் எதனையும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கவில்லை.

ஆனால் இந்த நிர்வாக ரீதியான மக்களின் பல தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நோக்கோடு உள்ள அலுவலகங்களே மக்கள் வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

கொப்பேகடுவ மரணமடைந்தவுடன் நாம் பெரிய வெற்றியைக் கண்டுவிட்டோம் என்று நினைக்கவில்லை.

எந்தத் தன்மையோடும், எந்தத் தளபதிகள் வந்தாலும் அதை எதிர்த்து வெற்றியீட்டக் கூடியதான நம்பிக்கையும் உறுதியும் எம்மிடம் உள்ளது.

இராணுவப் படையெடுப்பு மூலம் தற்காலிகமாக ஒரு அகதிப்பிரச்சினையை எதிர் நோக்க வேண்டிவரும். ஆனால் தற்பொழுதும் எமது மக்கள் பல தடைகளால் மிகமோசமான நெருக்கடிகளை சந்தித்த வண்ணமே உள்ளனர்.

கைதிகள் விடுதலை சம்பந்தமாக எமது இயக்கம் புதிய நிபந்தனைகள் எதையும் விதிக்கவில்லை.

ஆனால் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை திடீரென மாற்றி பொருளாதாரத் தடைகளை அகற்றுவதற்கு மறுத்துவிட்டது. எனவே அரசாங்கம்தான் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை.

ஆனால் மனிதாபிமான அடிப்படையில் எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் இரண்டு கைதிகளை விடுதலை செய்துள்ளார். இது எமது இயக்கத்தின் நல்லெண்ணத்தைக் காட்டுகிறது.

பூநகரிப்பாதை சம்பந்தமாக அரசாங்க பிரதிநிதியோடு அல்லது யூ. என். எச். சி. ஆரோடு பேசினோம்.

பூநகரிப் பாதையால் பொருட்கள் மாற்றுவதற்கும், கடுமையான நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கும் நாங்கள் இணங்கியிருந்தோம்.

ஆனால் அரசாங்கம் விடுத்த நிபந்தனைகள் அரசாங்கத்தின் ஆதிக்கத்தையும் அவர்களுடைய நடவடிக்கைகளையும் அனுமதிப்பதாகவும் ஏற்றுக்கொள்வதாகவும் இருந்ததால் நாங்கள் அக்கோரிக்கை சம்பந்தமான எமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தியிருந்தோம். (இ-ரி)

## கண்ணீர் அஞ்சலி

கிளாலிக் கடலில் சரித்திரம் படைத்த
கரும்புலிகள் கடற்புலிகளுக்கு
எமது கண்ணீர் அஞ்சலியை ஆழ்ந்த
கவலையுடன் செலுத்துகின்றோம்.

யாழ். வர்த்தக ஊழியர் சங்கம்,
235, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(எ-3380)

உ

ஊர்காவற்றுறை — நாரந்தனை

## அருள்மெருகு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் இரதோற்சவ தின வழிபாடு

30-08-93 திங்கள்
காலை 9-00 மணி

மேற்படி வழிபாடு
நல்லூர் முத்திரைச் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் உள்ள
கச்சேரி — நல்லூர் வீதியில் கோயில் கொண்டுள்ள

★ ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ★

ஆலயத்தில்
நடைபெற திருவருள் பாலித்துள்ளது.
அனைவரும் கலந்துகொண்டு
அருள்பெறுவோமாக

(கி-432) சைவ மகாசபை.

**மணிவாக்கு**

மேலே ஏறிச் செல்லும் வழிதான், கீழே இறங்கி வரும் வழியும் ஆகும்.

—ஹிராக் லிட்டஸ்.

## நமது நோக்கு

### பிரதேச அபிவிருத்தி

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 5 புதிய பிரதேச சபைகள் அமைக்கப்பட இருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இதனால் நிர்வாகம் மேலும் பரவலாகும்.

அரசியல் சுதந்திரத்திற்கான இளைஞரின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. தரையில் மாத்திரமல்ல, கடலிலும் வெற்றிகள் வந்தவண்ணம் உள்ளன.

இதேவேளை, பொருளாதாரச் சுதந்திரத்திற்கான போராட்டமும் தீவிரமடையவேண்டும்.

இந்த வகையில், பிரதேச மட்டத்தில் ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்க, அரச அதிபரும், பிரதேசச் செயலாளர்களும் அண்மையில் கூடித் தீர்மானம் எடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே.

திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும் எனத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் விளக்கமாக, விளக்கப் பயனுள்ள குறிப்புகளை வழங்கியுள்ளார்.

1980ம் ஆண்டில் யாழ். மாவட்டத் திட்டமிடல் பணிமனையால் அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

ஆனால், இத்திட்டத்தின் செயற்பாடுகள் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இராணுவ நடவடிக்கைகள், நிதிப் பற்றாக்குறை, பொருளாதாரத் தடைகள் ஆகிய காரணங்களால் நாம் சோர்ந்திருக்க முடியாது.

இந்தியா சுதந்திரம் அடைய முன்பே, காங்கிரஸ் கட்சியினரும், இந்தியாவினரும் பொருளாதார வளர்ச்சிக்கான தகவல்களைத் திரட்டிப் பல திட்டங்களை உருவாக்கினர்.

பிரதேசச் செயலகங்கள் மூலம் நிர்வாகம் பரவலாக்கப்பட்ட வேளையில், அந்த மட்டத்திலேயே குடிமக்களின் விபரங்கள், மூலவளங்கள் பற்றிய முழு விபரங்களும் தொகுக்கப்படல் அவசியமாகின்றது.

நீண்டகால, குறுகிய காலக் கருத்திட்டங்களை, முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்படுதல், நிதி வசதிகள் கிடைக்கும்போது விரைந்து செயற்பட உதவும் எனத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் வலியுறுத்தி உள்ளார்.

இதேவேளை; திட்டமிடல் பணிகளில் பல்கலைக்கழகம், பொது நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெறுவதும் அவசியம்.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல தகவல்களைத் திரட்டி, தமிழ்ப் பகுதிக்கான பொருளாதாரச் சிந்தனையை வளர்த்து வருகின்றது. திட்டமிடல் பணிக்கு அதன் ஆலோசனைகளும் நற்பலன் விளைக்கும்.

அனுபவம் உள்ள அதிகாரிகளும், பல்கலைக்கழகச் சிந்தனையாளர்களும், கிராம சேவையாளருக்கு அளிக்கும் பயிற்சி, நல்ல பயனை அளிக்கும் என நம்புகிறோம்.

## ★ தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் உதவித் தொகை ஐந்து மடங்கால் அதிகரிப்பு

(கொழும்பு)

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று உயர் கல்வி அமைச்சர் அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் 500 ரூபா தொகையை 5 மடங்காக உயர்த்திக் கொடுக்கப்படவுள்ளது.

இப்பொழுது 18,000 மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்வியை மேற்கொள்கிறார்கள். இவர்களில் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கே இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

மகாபொல புலமைப் பரிசில்களும் இவர்களுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ம)

### தமிழக நிலைமை பற்றி ஆலோசனை

(சென்னை)

தமிழ் நாட்டின் தற்போதைய சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து முதல்வர் செல்வி ஜெயலலிதா மாநில உயர் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நீடித்த இச் சந்திப்பில் தலைமைச் செயலர் டி. பி. வெங்கட்ராமன், உள்துறைச் செயலர் மணிசாமி, மாநில காவல் துறை தலைவர் ஸ்ரீபால் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

உள்ளூர்

### உற்பத்தி புடவைகளை சந்தைப்படுத்த ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாணக்குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் உற்பத்திப் புடவைகளை சந்தைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை யாழ்ப்பாண மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விரைவில் மேற்கொள்ள இருக்கின்றது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக பெருமளவு உள்ளூர் நெசவு உற்பத்திப் புடவை வகைகளை உற்பத்தியாளர்களிடமிருந்து சமாசம் கொள்வனவு செய்துள்ளது.

சமாசத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இப்புடவை வகைகளை நியாயமான விலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மக்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்போவதாக சமாசத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார். (109)

### 1500 ஆங்கில ஆசிரியர் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

1500 ஆங்கில ஆசிரியர்கள் மேலும் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களில் 1200 பேர் மாவட்ட மட்டத்தில் ஆசிரியர்களாக நியமனம் பெறுவர் என்றும் கூறப்படுகிறது. -ம

## தமிழக எதிர்க்கட்சி தலைவர் உண்ணாவிரதமிருக்கிறார்

(சென்னை)

தமிழ்நாட்டில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் பற்றி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு தமிழ்நாடு அரசை ஆளுநர் சென்னாரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்தோடு திரு. பாலசுப்பிரமணியத்துக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் ஆளுநர் மேலும் கோரியுள்ளனர்.

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் காவல்துறை ஆணையர் இடம் மாறிச் செல்லும் வரைக்கும் தமது உண்ணாவிரதம் தொடரும் என்று திரு. பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-சி)

ஆரம்ப பாடசாலை

### ஆசிரியராக இருக்க யாரும் விரும்புவதில்லை

(யாழ்ப்பாணம்)

நமது சமூகத்தில் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களை மதிப்பளித்து அவர்களின் சேவைகளைக் கௌரவிப்பதில்லை என்று தமிழீழ கல்வி மேம்பாட்டு கழகத் தலைவர் திரு. இளங்குமரன் குறிப்பிட்டார்.

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்தின் உபஅதிபராக பத்து ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி கனகமணி சுந்தரசாமியின் சேவை நலன் பாராட்டு விழாவிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ஆரம்ப பாடசாலை ஆசிரியராக இருக்க யாரும் விரும்புவதில்லை. சமுதாயம் தங்களை மதிப்பதில்லை. பாராட்டுவது இல்லை என்ற எண்ணம் அவர்களிடம் உண்டு.

இப்பாடசாலையின் பழைய மாணவன் ந. இலட்சுமிகாந்தன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. (ம)

### மீன்பிடி பயிற்சி கல்லூரியை மூடுமாறு அமைச்சு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் கடந்த பத்து ஆண்டுகளாக இயங்கி வந்த மீன்பிடி பயிற்சிக்கல்லூரியை உடனடியாக மூடிவிடும்படி கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் மைக்கல் பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சரின் மேற்படி உத்தரவைத் தொடர்ந்து இந்த பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றி வந்த பத்து உத்தியோகஸ்தர்களும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடமாற்றப்பட்டுள்ளார்கள்.

புதிய மீன்பிடி பயிற்சிக் கல்லூரி ஒன்று விரைவில் திருமலையில் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் இக்கல்லூரியில் முஸ்லீம் இளைஞர்களுக்கு கூடிய சந்தர்ப்பம் வழங்கும் முகமாக துரித நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

**காலமழிப்பு என்பது நாலமழிவின் கட்டியம்**

இனப் பிரச்னை

### நிரந்தர தீர்வு அவசியம்

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு அவசியம் என்று சபாநாயகர் எம். எச். மொகமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தெரிவுக் குழுவும் இனப்பிரச்னை விடயத்தில் நட்டாற்றில் விட்டுவிட்டது. குறுகிய எண்ணங்களை மறந்து, திறந்த மனத்தோடு கலந்துரையாடி இறுதியாகத் தீர்வு காணவேண்டும். (ம)

### மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள மன்றக் கலா மண்டபத்தில் இடம்பெறும்.

இசை நிகழ்ச்சியில் செல்வி குமுதினி கனகரெட்னத்தின் வயலின் இசை இடம்பெறுகின்றது. எஸ். மகேந்திரன்-மிருதங்கம். எஸ். துரைராசா-கஞ்சிரா.

பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக் கச்சேரியும் நடைபெறும் வயலின் வி. ஆர். இராதாகிருஷ்ணன், மிருதங்கம்-எம். சிதம்பரநாதன், கடம்-கே. கண்ணதாசன்.

சிறப்பு நிகழ்ச்சியாகத் தென்மராட்சி திலகநர்த்தனாலயம் வழங்கும் பரதநாட்டியம் இடம்பெறும். -ம

### இன்று

(மானிப்பாய்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்றுவரும் வருடாந்த உற்சவத்தில் 7ம் திருவிழாவான இன்று சனிக்கிழமை கைலாய வாகனத் திருவிழாவும், மாம்பழத் திருவிழாவும் இடம் பெறுகின்றன. (71)

0 0 0

(திருநெல்வேலி)

நல்லூர் லயன்ஸ் கழகம், வட மாகாணப் புற்றுநோய்த் தடுப்புச் சங்க அனுசரணையுடன் யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் புற்றுநோய்த் தடுப்புப் பற்றிய கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும். (157)

0 0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள யாழ்/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கணித மூலவள கற்புல சாதன நிலையம் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

0 0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை, தும்பளை தெற்கு டாலி பாலர்பாடசாலையும், தும்பளை கிழக்கு ஜெயசீலி பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டி, இன்று சனிக்கிழமை தும்பளை தெற்கு பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறுகின்றது.

### இராசிபலன்

28-08-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு ஆவணி 12)

துவாதசி பி. இ 5-17வரை பூராடம் பகல் 12-15 வரை. இராகுகாலம் காலை 9-05 முதல் 10-35 வரை சுபநேரம் மாலை 3-05 முதல் 4-35 வரை வைத்துணவ ஏகாதசி.

மேடம்- அதிர்ஷ்டக் குறைவு, மனக்குழப்பம், மனமுடை.

இடபம்- கண்ணிக்குறைவு தொழில் ஏமாற்றம் குடும்ப பிரிவு.

மிதுனம்- தொழில் லாபம், கடும் வேலைப்பளு. நண்பர் உதவி

கடகம்- திருமண யோகம் பயணம், காரிய சித்தி

சிம்மம்- இனசன துன்பம், வீண் குறைகேட்டல், யோசனை.

கன்னி- அதிகாரிகள் வெறுப்பு, ஏமாற்றம், வெறுப்பு

துலாம்- தேடிய உறவு, குடும்ப மகிழ்ச்சி, புத்திரர் உதவி.

விருச்சிகம்- அடிமைநிலை, மனைவி கோபம், வீண் செலவு.

தனுசு- அதிக பிரயாசம், கல்வி சிறப்பு, பணவரவு.

மகரம்- வீண் துயரம், மாதாகலகம், அகால உணவு.

கும்பம்- பொதுப்பணி, மனக்கழிப்பு, பெண்சகாயம்.

மீனம்- வாக்கு வசீகரம். மனைப்பிரவேசம். சாமனர் உதவி.

ஜோஸ்யர்

### போற்றுவர் தையலையே!

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

★

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தம்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே

—அபிராமி அந்தாதி

(இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் 10ம் நாள் சப்பற உற்சவம்)

## யாழ். குடாவிற்கு அனுப்பும்
## ம. எண்ணெயை மட்டுப்படுத்தினால்
# அரச அதிபர்பதவி விலகுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு மண்ணெண்ணெ அனுப்புவதை மட்டுப்படுத்தும் தீர்மானம் மாற்றம் செய்யப்படாதெனில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தன்னால் தொடர்ந்தும் பணியாற்ற முடியாதெனக் கூட்டுப்படைத் தலைமையகத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கு கூறியதாக யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் அரச சேவையே தனக்கு வேண்டாமென்று பேசுவதாகக் கூறும் மாணிக்கவாசகர் எவ்விதமாகிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு இதன் மூலம் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையிட்டும் தான் மிக மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத்திற்கும் இடையிலிருக்கும் அவநம்பிக்கை நீங்கும் வரை யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸாரை விடுவிக்கும் முயற்சி சாத்தியமாகாது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் மண்ணெண்ணெ மட்டுப்படுத்தும் தீர்மானத்தை இட்டு நான் மகிழ்ச்சி அடைய முடியாது. அந்தத் தீர்மானம் மாற்றம் செய்யப்படாதெனில் தொடர்ந்து யாழ்ப்பாண அரசாங்க அதிபராக என்னால் கடமையாற்ற முடியாதென்று நான் அங்கு கூறியிருந்தேன். யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் பாவனை பற்றிய புள்ளி விபரங்களை நான் சமர்ப்பித்திருந்தேன். அது பற்றிக் கவனம் எடுப்பதாகக் கூட்டுப்படைத் தலைமையகம் ஏற்றுக் கொண்டிருந்ததென்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து பற்றித் தெரிவிக்கையில், டீசல் இன்மையால் மண்ணெண்ணெயில் ஓடக்கூடிய நிலைக்கு பயன்படுத்தப்படும் சீரற்ற வாகனங்கள் உள்ளன. அவை அதிக அளவில் புகைக்கின்றன வாகனச் சொந்தக்காரர்கள் அதிக கட்டணத்தை அறவிடுகின்றார்கள் என்றும் போக்குவரத்து வசதியின்மையால் மக்கள் தடை செய்யப்பட்ட பிரதேசம் என்பதைக் கவனத்தில் கொள்ளாது "கிளாலி" நீரேரி மார்க்கமாகச் செல்லுகின்றனர். கிளாலித்தடையை நீக்கும்படி நான் பலமுறை அரசிடம் கோரியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். —162-மி

## மாதகல், இயக்கச்சி பகுதியில் (1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்முயற்சியின் போது குடியிருப்புகளை நோக்கி கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

# 200க்கு மேற்பட்ட ஷெல்வீச்சு

நேற்றுக்காலை 8-30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை [பனிப்புலம், சுழிபுரம், சுழிபுரம் மேற்கு, இளவாலை, பொன்னாலை, மூளாய், சித்தங்கேணி, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி 200க்கும் மேற்பட்ட ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ் அகோர ஷெல் தாக்குதலினால் பல வீடுகளும் சேதமடைந்தன. சுழிபுரம் காளுவன் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் இருவர் பலத்த காயமடைந்துள்ளனர். இதேவேளை காரை நகர், மாதகல் கடற்பகுதிகளில் இருந்து கடற்படையினரால் பலத்த பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இப்பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து பல மணிநேரம் கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டன.

# இரு ஆலயங்கள் பலத்தசேதம்

சுழிபுரம் பகுதியில் புக்காரா மற்றும் பொம்மர்கள் நடத்திய குண்டுவீச்சினால் பறுளை முருகன் கோவில் தேர், தேர் கொட்டகை, தேர்முடி, வசந்தமண்டபம், மடப்பள்ளி, குருக்கள் வீடும், பனிப்புலத்தில் விழுந்த ஷெல்லினால் சிவன்கோவிலும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. காளுவன் சந்தியில் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் க. அருளம்பலம் (51வயது) இ. இராமச்சந்திரன் (55 வயது - காரைநகர்) ஆகியோர் உடல்சிதறிப் பலியானார்கள் ஒரு வீடும் சேதமடைந்துள்ளது. சித்தங்கேணியில் புக்காரா விமானங்கள் நடத்திய கோரத் தாக்குதலில் அச்சக உரிமையாளரான சுப்பிரமணியம் சர்வலோகராசா வயது 51, இவரது மனைவி திருமதி ச. சகுந்தலாதேவி (45 வயது) ஆகியோருடன் வழிப்போக்கர் ஒருவரும் பலியானார். இவரது உடலம் துண்டு துண்டாக சிதறிய நிலையில் கூட்டி அள்ளப்பட்டு வேட்டி ஒன்றில் பொதி செய்யப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# 20,000 பேர் இடம் பெயர்வு

வலிகாமம் மேற்கு பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினாலும் விமான குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்களினாலும் கடலில் இருந்து மேற்கொள்ளப்பட்ட அகோர பீரங்கி தாக்குதல்களினாலும் யாழ். குடா முழுவதும் அதிர்ந்தது அச்சம் காரணமாக சுழிபுரம், பண்ணாகம், பனிப்புலம், மூளாய், பொன்னாலை வடலியடைப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகள் நோக்கி இடம் பெயர்ந்து சென்றார்கள் பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் சைக்கிள்களிலும், கால் நடையாகவும் பாதுகாப்பை நாடி சென்றவண்ணமிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# காயமடைந்தோர் விபரம்

பண்ணாகம் அம்மன் கோவிலில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்கள்மீது விழுந்து வெடித்த ஷெல்லினால் மகேந்திரன் மோகனராணி (10 வயது மூளாய்), எஸ். கருணாகரன் (வயது 18 சில்லாலை), எஸ். சிறீதரன் (வயது 23 பண்டத்தரிப்பு) ஆகியோரும், சுழிபுரம் காளுவன் சந்தியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் ம. தனச்செல்வம் (13 வயது பண்ணாகம். மா. கிருபாகரன் (18 வயது அளவெட்டி), வே. கிருஷ்ணதேவி (வயது 25) ஆகியோரும் சித்தங்கேணியில் இடம்பெற்ற புக்காரா தாக்குதலில் குணசேகரம் சுந்தரராசா (18 வயது சில்லாலை) இ. சத்தியநாதன் 45 வயது சித்தங்கேணி) எஸ். இந்திரா 45 வயது ஆகியோர் உட்பட பலர் காயமடைந்தனர்.

# ஆலயங்களில் மக்கள் தஞ்சம்

சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்கள் ஆகிய பொது இடங்களில் அதிகமானவர்கள் தங்கியிருக்க காணப்பட்டனர். மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் தீர்த்த மண்டபத்திலும் பெருந்தொகையான மக்கள் தஞ்சமடைந்திருக்கக் காணப்பட்டனர். இதேவேளை செஞ்சிலுவைச் சங்க வலிமேற்கு கிளையினர் காயமடைந்தவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சையை வழங்கி வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் சென்றனர்.

தாக்குதல் முடிந்து இராணுவம் தனது நிலைகளுக்கு திரும்பிச் சென்ற பின்னர் இடம் பெயர்ந்தவர்களில் சிலர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் சென்றனர்.

புலிகளின் தாக்குதலில் சேதமடைந்த கவச வாகனம் படையினரால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இயக்கச்சியில் முன்னேற முயன்ற இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் எழுதுமட்டுவாளைச் சேர்ந்த மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். —56-72-157-162-137-170-மி

# முகமாலை, கிளாலியில் பலத்த குண்டுவீச்சு

கிளாலி, முகமாலை, தர்மக்கேணிப் பகுதியில் நேற்று பலத்த விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. நேற்றுக் காலை 8-40 மணியளவில் இரு பொம்மர்கள், இரு புக்காரா, ஒரு ஹெலிகொப்டர் பச்சிலைப்பள்ளியைச் சுற்றி வட்டமிட்டு பலத்த குண்டுதாக்குதலை நடத்தின. கிளாலியில் மூன்று குண்டுகளும், முகமாலை, தர்மக்கேணியில் பல குண்டுகளும் வீசப்பட்டன. இக்குண்டுகள் விழுந்த இடங்களில் பாரிய குழிகள் காணப்படுகின்றன. —170-மி

# கடற்படை தளபதி
## வடபகுதிக்கு விஜயம்

(கொழும்பு)

கிளாலி கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் அதிகாலை கடற்புலிகளின் தாக்குதல் சம்பவத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து ஆராய்வதற்கு ஸ்ரீலங்கா கடற்படைத்தளபதி மொஹான் சமரசேகரா வடபகுதிக்கு நேற்று விஜயம் செய்தார்.

கடற்படைத் தளபதியுடன் இராணுவ உயரதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் அங்கு சென்றது. -இ

## நாளை ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தேர்த் திருவிழா நாளை 29ம் தேதி ஞாயிறு காலை 7 மணி வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகி, காலை 9 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல் இடம்பெறும்.

தீர்த்தத் திருவிழா 30ம் தேதி திங்கள் ஆவணி ஓணம் துர்க்கா புஷ்கரணி தீர்த்தத் தடாகத்தில் காலை 8 மணிக்கு தீர்த்த விழா இடம்பெறும்.

## சீமெந்து ஊழியர்சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு ஆடி மாதத்திற்கான சம்பளம் தற்காலிக காரியாலயத்தில் 30-ந் திகதி திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. —கி

## விடுமுறை மாற்றம்

(கொழும்பு)

இம் மாதம் 31ம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த அரசாங்க, வர்த்தக, வங்கி விடுமுறைத் தினத்தை 30ம் திகதியாக நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. —ம

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் இன்று போட்டியிடும் கழகங்களின் விபரம் வருமாறு:

இன்றைய முதல் போட்டியில் திருமலை நட்சத்திரத்தை எதிர்த்து மணிபுரிமோதும். 2வது ஆட்டத்தில் யங்ஸ்ரேயர் கழகத்தை எதிர்த்து வைகிங்ஸ் கழகம் மோதும். —கி

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ம:ரி)

## கடற்புலிகளுக்கு இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கிளாலி கடற்பரப்பில் நேற்று முன்தினம் வீரச்சாவடைந்த மூன்று கடற்புலிகளின் பூதவுடல்கள் நேற்று பூரண இராணுவ மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மேற்படி மாவீரர்களின் பூதவுடல்கள் நேற்று யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது பெருந்திரளான மக்கள் வீதிகளின் இருமருங்கிலும் நின்று மாவீரர்களின் உடல்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்கள். (வி-மி)

## சிறப்பிதழ்

நாளைய "ஈழநாடு" தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய சிறப்பிதழாக வெளிவருகின்றது. ஆ-ரி

**கிளாலி கடற்** (1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் மேலும் நான்கு படையினரை காணவில்லை எனவும் இராணுவத்தினர் தெரிவித்தனர். -சி

**ஆனையிறவு** (1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதிகளில் சிலர் காயமடைந்தனர். ஒரு உழவு யந்திரம் பலத்த சேதமடைந்தது. சில வீடுகளும் சேதமடைந்தன. பல தென்னைமரங்கள் முறிந்து சேதமாயின.

காயமடைந்தவர்களில் புலோப்பளையைச் சேர்ந்த பி. மாலிங்கம் (வயது 43) வி. ஜெயகுருநாதன் (வயது 22) எஸ். பாலேந்திரன் (வயது 22) ஆகிய மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (170-56-ரி)

**பயிலுநர்** (1ம் பக்கத் தொடர்ச்சி)

யசோதா கிங்னர், தயாநிதி தம்பிராஜா, துஷ்சந்தினி மகிந்தா இராசேந்திரம், சேரிலின் சுபத்திரா பிலிப், மோறின் சுமித்திரா பிலிப், புவனேஸ்வரி முருகேசம்பிள்ளை கலாநிதி சண்முகநாதபிள்ளை, எஸ் சுகந்தினி, சிவானந்தினி சிவஞானசுந்தரம், திருமதி தேவராணி தியாகராஜா, திரு. எம். ஆனந்தராஜா, திரு. என். பிரபாகரன், திரு. கே. சேயோன் செல்விகள் கே. சுமதி, லோகநாயகி கதிர்த்தம்பி, நாமகள் கிருஷ்ணபிள்ளை, திருமதி தயாமதி திருநந்தகுமார், செல்விகள் சுகந்திரராணி குருநாதபிள்ளை, கீதா குமாரகுலசிங்கம், பிரேமினி செல்லத்துரை, வாசுகிதேவி செல்வரத்தினம். சாரதாதேவி வல்லிபுரம், திரு. ரீ. கே. சோமஸ்கந்தராஜா, திருமதி நிரூபா கிருஷ்ணபாலன், திரு. திருமகள் ஆரு அருள்மோகன், செல்வி கே. வசந்தகுமாரி, திரு. கே. வேலாயுதநாதன், செல்வி எஸ். சுப்பிரமணியம் திரு. சிவபாலன் வேலுப்பிள்ளை. திரு. பீ. சந்திரகுமார். (ரி)

**புலிகள்** (1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேடும் முகமாக வந்த கடற்படையினருக்கும் கடல் புலிகளுக்குமிடையில் பெரும் மோதல்கள் ஏற்பட்டன.

கடல்புலிகளின் கடும் தாக்குதலைச் சமாளிக்க முடியாத கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர். (வி-மி)

**இயக்கச்சியில்** (1ம் பக்கத் தொடர்ச்சி)

ராவார்.

இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி இவர் அரசர்கேணியில் வசித்து வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (170)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஆதாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under license Number B/10 336/B